**தலைப்பு 272 – குருநாகல் மாவட்டச் செயலகம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 272 – குருநாகல் மாவட்டச் செயலகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் குருநாகல் மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2024 மே 14 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகம் தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2024 மே 13 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இவ் அறிக்கையின் 1.6 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினை தவிர்த்து, 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான குருநாகல் மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ் அறிக்கை 1.6 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவே அன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் ஒன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன என

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

### (அ) ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | குளியாப்பிட்டி (கிழக்கு), உடுபத்தாவ, மல்லவபிடிய, ரஸ்னாயகபுர மற்றும் கல்கமுவ ஆகிய 05 பிரதேச செயலகங்களில் நிறுவப்பட்டு 16 வருடங்கள் முதல் 60 வருடங்கள் வரையான காலம் கடந்திருந்த போதிலும் அந்த அலுவலகங்கள் அமைந்துள்ள காணிகளை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன் அந்த காணிகளை பெறுமதி மதிப்பீடு செய்து ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை. | உரித்தாக்குவதற்குரிய அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என. | காணியை உரித்தாக்கி பெறுமதியை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 2022 ஆண்டில் கிராமத்துடன் நேசக் கலந்துரையாடல் செயற்திட்டத்தின் கீழ் 05 பிரதேச செயலகப்பிரிவுகள் தொடர்பாக நிர்மாணிக்கப்பட்டிருந்த 16 சேவா பியச கட்டிடங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 6,590,261 இற்கான பெறுமதி நிலையான சொத்துக்கள் என இனங்கண்டு கணக்கீடு செய்திருக்கவில்லை. | செலவிடப்பட்ட தொகையை எதிர்காலத்தில் நிலையான சொத்துக்கள் என கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | கட்டிடங்களின் பெறுமதி நிலையான சொத்துக்கள் என கணக்கீடு செய்ய வேண்டும். |

**(ஆ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணியிருக்காமை**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2022 திசெம்பர் 13 திகதிய இலக்கம் 2022/05 இலக்கங் கொண்ட அரச கணக்கு வழிகாட்டலில் 8.1 பந்தியின் பிரகாரம் சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தினுள் நிலையான சொத்துக்கள் மொடியூலர் மூலம் 10 பிரதேச செயலகங்களின் நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரை ஆக்கப்பட்டிருக்கவில்லை. | நாளதுவரை ஆக்கப்பட்டு பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலையான சொத்துக்கள் மொடியூலர் மூலம் நிலையான சொத்துக்கள் பதிவேட்டினை நாளதுவரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 454(2) இற்கு இணங்க 02 பிரதேச செயலகங்களில் மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளவாறு மின்சார உபகரணப் பதிவேடு பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | மின்சார துணைக் கருவிகள் உபகரணங்கள் தொடர்பாக பொருட்பதிவேடு பேணிச் சென்றிருக்கவில்லை. |
| (iii) | நிதிப் பிரமாணம் 214 இற்கு இணங்க ஒரு பிரதேச செயலகத்தினால் பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு நாளதுவரை ஆக்கியிருக்கவில்லை. | பொறுப்புக்கள் பதிவேடு உரிய முறையில் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | பொறுப்புக்கள் நாளாந்தம் பரிசோதனை மேற்கொள்ளக் கூடியவாறு பொறுப்புக்கள் பதிவேடொன்றில் அந்த பொறுப்புக்களை பதிவு செய்யப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள் விதிகள் பிரமாணங்களுடன் இணங்கியிருக்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

| | அவதானிப்பு<br>சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி<br>ரூபா. | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் அத்தியாயம் XXIV பிரிவு 14.11 | 13,905,291 | உத்தியோகத்தர் ஒருவருடைய சேவையை இடைநிறுத்திய போது கடன்தொகையிலிருந்து அது வரை செலுத்தியிருக்காத மீதியை அந்த உத்தியோகத்தரின் ஓய்வூதியத்திலிருந்து அல்லது ஓய்வூதிய பணிக்கொடையிலிருந்து சட்டரீதியாக அறவீடு செய்வதற்காக 23 ஆவது பின்னிணைப்பு ஆகிய ஓய்வூதிய மாற்றம் செய்வதற்காக வழங்கப்படும் இரத்து செய்ய முடியாத உறுதிக்கூற்று பெற்றுக் கொள்ள வேண்டிய போதிலும், 06 பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் 85 பேரிடம் அவ்வாறான கூற்றொன்று பெற்றுக் கொள்ளாமல் கடன்தொகை வழங்கப்பட்டிருந்தது. | தவறுதலாக 23 ஆவது பின்னிணைப்பு பெற்றுக் கொண்டிருக்காததுடன் கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்ட பின்னர் அந்தக் கூற்று பெற்றுக் கொண்டு கோவைகளில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | கடன்தொகை வழங்கும் போது இரத்துச் செய்ய முடியாத உறுதிக்கூற்று பெற்றுக்கொள் ள வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 571 | 38,094,253 | மாவட்ட செயலகம் மற்றும் 18 பிரதேச செயலகங்களின் ஒப்பந்த வேலை தடுத்து வைத்தல் பணம் 2 வருடங்கள் முதல் 5 வருடங்களுக்கு மிகையாக காலம் வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | செயற்திட்டங்களில் குறைபாடுகள் காணப்படல் மற்றும் கட்டுநிதிகள் கிடைக்கப் பெறாமை காரணமாக தீர்க்க முடியாமல் போனது என. | பிரமாணங்களு க்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2018 ஜனவரி 24 ஆந் திகதி இலக்கம் 02/2018 கொண்ட பொது நிருவாகச் சுற்றறிக்கை | | சுற்றறிக்கைக்கு இணங்க ஒவ்வொரு ஆண்டிலும், உத்தியோகத்தர் ஒருவருக்கு குறைந்த அளவு 12 | 2023 ஆண்டில் 12 மணித்தியாலங்களுக்கு குறையாத சந்தர்ப்பம் வழங்கக் கூடியவாறு பயிற்சி வழங்கள் | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டியிருந்த |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | மணித்தியாலயத்திற்கு குறையாத பயிற்சி சந்தர்ப்பம் ஒன்று வழங்கியிருக்க வேண்டிய போதிலும், குருநாகல் மாவட்ட செயலகம் மற்றும் 30 பிரதேச செயலகங்களில் 11 பதவிகளுக்குரிய 2848 உத்தியோகத்தர்களுக்காக மீளாய்வாண்டின் போது எதுவித பயிற்சிச் சந்தர்ப்பங்களும் வழங்கியிருக்கவில்லை. | திட்டமொன்று தயாரிக்கப்பட்ட போதிலும் திறைசேரியினால் பணம் வழங்கப்படாமையால் பயிற்சி சந்தர்ப்பம் வழங்குவதற்கு முடியாமல் போனது. | து. |
| (ஈ) | 2019 ஜுன் 27 ஆந் திகதிய இலக்கம் 05/2019 கொண்ட சுற்றறிக்கையின் பிரிவு 3(உ) | 40,150 | ரிதீகம மற்றும் நாரம்மல் 02 பிரதேச செயலகங்களில் வேலை இடைநிறுத்தப்பட்ட உத்தியோகத்தர் இருவர் தொடர்பாக அறவிடப்பட வேண்டியிருந்த இடர் மற்றும் ஆதனக் கடன் மீதிகள் 05 வருடங்களுக்கும் 20 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் அறவிடபப்படாமல் காணப்பட்டது. | ரிதீகம கிராம உத்தியோகத்தர்களின் 2024 ஜனவரி ரூபா 2,000 இற்கான தொகையொன்று அறவீடு செய்யப்பட்டுள்ளதுடன் மேலும் ரூபா 14,150 தொகையொன்று அறவிட வேண்டிக் காணப்பட்டது. நாரம்மல பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர் ஒருவருக்கு குறிப்பிட்ட தொகை செலுத்தும் படி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | கடன் மீதியை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | 2020 செப்தெம்பர் 18 திகதிய இலக்கம் 16/2020 கொண்ட உள்ளகப் பாதுகாப்பு, உள்நாட்டு அலுவலக மற்றும் இடர் முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கையின் பந்தி 10 | - | பிரதேச செயலாளர், உதவிப் பிரதேச செயலாளர் மற்றும் நிருவாக கிராம உத்தியோத்தரினால் 4 மாதங்களுக்கு ஒரு முறை அனைத்து கிராம உத்தியோகத்தர் அலுவலகங்களும் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், குருநாகல் மாவட்டத்தில் 09 பிரதேச செயலகங்களுக்கு உரிய 109 கிராம உத்தியோகத்தர் | பரிசோதனை மேற்கொள்ளல் தவிர்க்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பிரிவுகளில் கிராம உத்தியோகத்தர் அலுவலகம் ஒருமுறை ஏனும் பரிசோதனைக்கு ஆளாக்கப்பட்டிருக்கவில்லை. | |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 எதிர்பார்த்த நலன்கள் (Outcome) பெற்றுக் கொள்ளப்படாமை**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 சௌபாக்கிய உற்பத்திக் கிராம நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் எஹெடுவெவ பிரதேச பிரிவில் 20 நலன்பெறுவோருக்காக ஜபன் ஜபர சார்ந்த உற்பத்திகள் மேற்கொள்ளும் தொழிற்சாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டு தையல் இயந்திரங்கள் உட்பட உபகரணங்கள் வழங்குவதற்காக ரூபா 9,016,765 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் நலன்பெறுவோர் ஒருவரின் மாதாந்த வருமானம் ரூபா 4,105 தொகை மாத்திரம் காணப்பட்டமையால் செயற்திட்டம் எதிர்பார்த்த மட்டத்தில் செயற்படுத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டது, | புதிய சந்தை சந்தர்ப்பங்கள் மற்றும் சந்தை உபாயங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் புதிய சந்தை விளம்பர முறைமையூடாக சந்தை சந்தர்ப்பங்களை விரிவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நலன்களை பெற்றுக் கொள்ளக் கூடியவாறு நிறைவேற்றப்பட வேண்டும். |
| (ஆ) | சௌபாக்கிய உற்பத்தி கிராம நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2021 மற்றும் 2023 ஆண்டுகளின் போது பமுனுகொடுவ பிரதேச செயலகத்திற்குரிய வலலிய மற்றும் கடிகாரய பிரிவுகளுக்காக ரூபா 4,760,777 இற்கான செலவொன்று மூலம் மட்பாண்ட கைத்தொழிலை முன்னேற்றும் செயற்திட்டமொன்று செயற்படுத்தப்பட்டிருந்த போதிலும் தெரிவுப் பரிசோதனையின் படி ரூபா 480,000 இற்கான நலன்கள் பெற்றுக்கொண்ட 06 நலன்பெறுவோரினால் மட்பானை கொட்டில் மற்றும் வழங்கியிருந்த உபகரணங்களை பயன்படுத்தியிருக்கவில்லை. | குறிப்பிட்ட உபகரணங்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | செயற்திட்டத்தின் உபகரணங்கள் உரிய முறையில் பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2022 ஆண்டின் கிராமத்துடன் நேசக் கலந்துரையாடல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபா 732,000 இற்கான செலவில் நிகவரெட்டிய பிரதேச செயலகப் பிரிவில் 03 குளங்களில் ஆக்கிரமித்திருந்த தாவரங்களை அகற்றல் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டு 1½ வருடம் போன்ற குறுகிய காலத்தில் மீண்டும் முழு நீரின் மேற்பரப்பு ஆக்கிரமித்திருந்த தாவரங்களினால் மூடப்பட்டிருந்தது. குறிப்பிட்ட பிரதேச மக்களின் வளங்கள் நிலைபேறாக பயன்படுத்தல் மற்றும் பராமரிக்கப்படாமையால் மற்றும் பொறுப்பு சொல்ல வேண்டிய உத்தியோத்தர்கள் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படாமையால் இதற்காக செலவிடப்பட்ட தொகை விளைவற்ற நிலைமைக்கு மாறியிருந்தது. | எதிர்காலத்தில் தொடர்ச்சியாக நீர்த் தாவரங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கும் படி விவசாய அமைப்புக்கு அறிவுறுத்தப்பட்டது என. | செயற்திட்டம் எதிர்பார்த்த குறிக்கோள் நிறைவேற்றப்படக் கூடியவாறு செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் தேவையான பராமரிப்பு அலுவல்களுக்காக பொதுமக்களை ஊக்குவிக்க வேண்டும். |
| (ஈ) | வாரியபொல பிரதேச செயலகப் பிரிவில் 2022 ஆண்டில் கிராமத்துடன் நேசக் கலந்துரையாடல் ரூபா 3 மில்லியனுக்கான நிகழ்ச்சித் திட்டமொன்று தொடர்பாக ரூபா 261,875 இற்கான தொகை ஒன்றின் மூலம் கெதென்னாவ வயல்வெளியில் கதிராகல கால்வாயின் ஓரங்கள் பாதுகாக்கப்பட்டிருந்த போதிலும் கால்வாயின் சில இடங்களில் அணைக்கட்டு உடைந்து காணப்பட்டதுடன், மழை காலங்களில் வயல் நிலங்களில் மணல் படிதல் மற்றும் பல நாட்கள் நீர் நிரம்பியிருத்தல் காரணமாக 150 ஏக்கர் அளவான வயல்வெளியில் விவசாய அலுவல்கள் உரிய காலத்தில் மேற்கொள்ள முடியாமல் இருந்தது. பயிர் செய்கை நிலங்களுக்கு விவசாய இயந்திர உபகரணங்கள் எடுத்துச் செல்லக் கூடியவாறு பாதை வசதிகள் தயாரித்திருக்காமையால் இயந்திர உபகரண போக்குவரத்தின் போது சேதம் ஏற்பட்டிருந்தது. செயற்திட்டப் | டிரக்டர்களை எடுத்துச் செல்வதற்காக இடம் தயாரிப்பதற்கு பணம் போதியவையாக காணப்படாமையால் இந்த கால்வாயை பராமரிப்பதற்கு மற்றும் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமை தொடர்பாக உரிய நடவடிக்கை எடுத்து செயற்திட்டத்தை வெற்றிகரமாக எடுத்துச் செல்வதற்காக அவுலேகம கமநல அபிவிருத்தி பிரதேச உத்தியோகத்தருக்கு அறிவுறுத்தப்பட்டது என. | செயற்திட்டம் நிறைவேற்றப்படும் போது ஆக்கபூர்வமான முறையில் எதிர்பார்த்த நலன்களை பெற்றுக் கொள்ளக் கூடியவாறு நிறைவேற்றப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பிரேரணைகள் தயாரிக்கும் போது இது தொடர்பாக கவனம் செலுத்தாமையால் செலவிடப்பட்ட முழுத் தொகையும் விளைவற்ற செலவொன்றாக மாறியிருந்தது. | | |
| (உ) | விவசாய அமைச்சின் ரூபா 851,250 இற்கான ஏற்பாடுகள் மீது 2023 ஆண்டின் போது ஈரப்பலா பயிர்ச்செய்கையை பிரசித்தப்படுத்தல் மற்றும் விற்பனை தொடர்பான முன்னோடிச் செயற்திட்டமொன்று செயற்படுத்துவதற்காக குருநாகல் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 15 பிரதேச செயலகங்களில் ஒரு பிரிவுக்காக 50 ஈரப்பலா கன்றுகள் வீதம் 50 நலன்பெறுவோருக்காக 750 ஈரப்பலா கன்றுகள் மற்றும் ஈரப்பலாவின் நீர் நீக்கத்திற்காக மாஸ்பொத பிரதேச செயலக பிரிவில் ஒரு நலன்பெறுவோருக்கு சிறிய அளவிலான நீர் நீக்கல் இயந்திரம் உட்பட ஏனைய 03 இயந்திரங்கள் வழங்கப்பட்டு இருந்தது. ஈரப்பலாவின் நீர் நீக்கத்திற்காக 15 பிரதேச செயலகப் பிரிவுகளில் விளைச்சல்களை மாஸ்பொத பிரதேசத்திற்கு எடுத்துச் செல்வதற்கு அல்லது அந்த நீர் நீக்கும் இயந்திரத்தை அந்த பிரதேசங்களுக்கு எடுத்துச் செல்வதற்கு கூடிய கிரயமொன்று மேற்கொள்ள நேரிடல் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்காமை, நீர் நீக்கிய ஈரப்பலா சார்ந்த உற்பத்திகள் சந்தை விலை அதிகமாக இருத்தல் மற்றும் ஏற்றுமதி செய்முறை ஒன்று தயாரித்திருக்காமை மற்றும் வழங்கியிருந்த 750 ஈரப்பலா கன்றுகளும் ஆரம்ப கன்றுகள்(லேயர்) ஆகக் காணப்பட்டதுடன், லேயர் கன்றுகளின் விளைச்சல் பெற்றுக் கொள்வதற்கு 3 வருடங்கள் மிகையான காலமொன்று எடுப்பதன் காரணமாக இந்த செயற்திட்டம் நடைமுறை சாத்தியத்திற்கு புறம்பான செயற்திட்டம் ஒன்றாக மாறியிருந்தது. | இந்த செயற்திட்டம் மேற்கொள்ளும் போது விவசாய அமைச்சினால் வழங்கப்பட்டிருந்த அறிவுரைகளின் படி குருநாகல் மாவட்டத்தில் ஈரப்பலா பயிர்செய்கை அதிகமாக மேற்கொள்ளப்படுவதனால் கூடிய விளைச்சலொன்று பெற்றுக் கொள்ளும் இந்த பிரதேசம் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், வருமானம் உழைத்தல் மற்றும் ஏற்றுமதி இதன் மூலம் எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் ஒட்டு ஈரப்பலா கன்றுகள் பெற்றுக் கொள்ளல் கடினமாக இருந்தமையால் லேயர் கன்றுகள் விவசாயிகளுக்கு உரிய மூலப் பிரமாணங்களுக்கு இணங்க வினியோகிக்கப்பட்டது. அந்த கன்றுகளின் மூலம் 3 வருடங்களில் விளைச்சலை பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | செயற்திட்டத்தை நிறைவேற்றும் போது எதிர்பார்த்த நலன்களை பெற்றுக்கொள்ளக் கூடியவாறு செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | 2018/2019 ஆண்டுகளின் போது ஜனாதிபதி அலுவலகத்தினால் செயற்படுத்தப்பட்ட கிராம சக்தி மக்கள் திட்டத்தின் முதலாவது கட்டத்தின் கீழ் குருநாகல் மாவட்டத்திற்காக கொள்திறன் அபிவிருத்தி, சுழல் கடன்செயற்திட்டம் தொடர்பாக நிதியத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 178,789,500 தொகையில் 44 சதவீதமாகிய ரூபா 77,963,280 இற்கான தொகையொன்று மீளாய்வாண்டு இறுதியளவில் எதுவித தேவைக்கும் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது. | குறிப்பிட்ட பணத்தை செலவு செய்வதற்காக சங்கங்களின் மூலம் பல்வேறு திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமையால் குறிப்பிட்ட பிரேரணைகளை பெற்றுக் கொண்டு அந்த நிகழ்ச்சித் திட்டத்தை எதிர்காலத்தில் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | கிராம சக்தி மக்கள் திட்டத்தின் குறிக்கோள் ஆக்கபூர்வமாக நிறைவேற்றக் கூடியவாறு செயற்படுத்தப்பட வேண்டும். |
| (எ) | 2021 சௌபாக்கிய உற்பத்தி கிராம நிகழ்ச்சித் திட்டம் மற்றும் 2022 கிராமத்துடன் நேசக் கலந்துரையாடல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரிதீகம பிரதேச செயலகத்தை சேர்ந்த ரன்தெடிகந்த பிரிவின் சிறு ஏற்றுமதி பயிர்செய்கை மேம்படுத்தும் நிலையமொன்று நிர்மாணித்தல் மற்றும் அதற்குரிய இயந்திர உபகரணங்கள் வழங்குவதற்காக ரூபா 5,322,414 இற்கான தொகையொன்று செலவிடப்பட்டிருந்த போதிலும் குறிப்பிட்ட இயந்திர உபகரணங்களை குறைந்த மட்டத்தில் காணப்பட்டமையால் செயற்திட்டம் எதிர்பார்த்த நலன்களை பெற்றுக்கொள்ள முடியாமல் இருந்தது. | அறுவடை காலத்தில் இயந்திரங்களை பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என. | செயற்திட்டங்களை ஆக்கபூர்வமாக குறிக்கோளை நிறைவேற்றக் கூடிய வகையில் உபகரணங்களை உரிய முறையில் பயன்படுத்த வேண்டும். |
| (ஏ) | 2021 ஆண்டின் கிராமிய விளையாட்டு மைதானம் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் குளியாப்பிட்டிய (கிழக்கு), வீரம்புகெதர, பம்முனாகொடுவ, இப்பாகமுவ ஆகிய 4 பிரதேச செயலகப் பிரிவுகளில் ரூபா 4,822,027 தொகை மொத்தச் செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 04 கரப்பந்தாட்ட விளையாட்டுத் திடல்களும் மீளாய்வாண்டளவில் பயன்படுத்தப்படாமல் மற்றும் பராமரிக்கப்படாமல் காணப்படுவதுடன் இப்பாகமுவ, எஹெடுவெவ, நாரம்மல மற்றும் | விளையாட்டு மைதானத்தை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | செயற்திட்டங்களை ஆக்கபூர்வமாக குறிக்கோளை நிறைவேற்றக் கூடிய வகையில் செயற்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பொல்பிதிகம ஆகிய 04 பிரதேச செயலகப் பிரிவுகளுக்குரிய ரூபா 5,749,404 இற்கான மொத்தச் செலவொன்று மேற்கொள்ளப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த 04 கிராமிய கரப்பாந்த விளையாட்டுத் திடல்களின் வேலை பூர்த்தி செய்யப்பட்டிக்காமையால் நிகழ்ச்சித் திட்டத்தின் எதிர்பார்த்த நலன்கள் பெற்றுக் கொள்வதற்கு முடியாமல் இருந்தது. | | |
| (ஐ) | 2021 ஆண்டு சௌபாக்கிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மல்லவபிட்டி பிரதேச செயலகப் பிரிவில் இந்துல்கொடகந்த கிராம உத்தியோகத்தர் பிரிவில் வாசனை திரவியங்கள் சார்ந்த உற்பத்தி நிகழ்ச்சித் திட்டம் ஒன்றிற்காக ரூபா 1,256,563 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் வருமானம் உழைத்தல் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன், கட்டுபிடிய வடக்குப் பிரிவில் ரூபா 1,631,000 இற்கான செலவில் செயற்படுத்தப்பட்டிருந்த தும்பு தூரிகை உற்பத்தி செயற்திட்டம் ஒன்றிற்கு வழங்கியிருந்த தும்பு திரித்தல் இயந்திரம் குறைபயன்பாட்டுடன் காணப்பட்டது. | ஏற்றுமதி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் தலையீட்டுடன் விற்பனையாளர்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் எதிர்காலத்தில் இந்த உபகரணங்களை உச்ச மட்டத்தில் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | செயற்திட்டத்தை ஆக்கபூர்வமான குறிக்கோள்களை நிறைவேற்றுமுகமாக நலன்பெறுவோரின் வருமான மட்டத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் வழங்கியிருந்த உபகரணங்கள் பயன்படுத்தப்பட வேண்டும். |

**3.2 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்படல்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இப்பாகமுவ பிரதேச செலயகத்தினால் 2013 ஆண்டின் போது செயற்படுத்தப்பட்ட அம்பன்பொல நீர்ச் செயற்திட்டம் மற்றும் இலக்கம் 425 கடுபொத யுனிட் 03 நீர்த்திட்ட செயற்திட்டத்தின் மீதியான வேலையை பூர்த்தி செய்வதற்காக முறையே ரூபா 1,979,148 தொகை மற்றும் 3,959,328 தொகை 2020 ஆண்டின் போது செலவிடப்பட்டிருந்த போதிலும், நீர் மூலவளத்திலிருந்து தொட்டி வரை நீர்க் குழாய் விரித்தல் பூர்த்தி | சமூக நீர் வழங்கள் திணைக்களத்தின் மூலம் இந்த செயற்திட்டத்தின் தொடர் நடவடிக்கைகள் நிறைவேற்றுவதற்கு திட்டமிட்டுள்ளது என. | செயற்திட்டம் ஆக்கபூர்வமாக குறிக்கோள்களை நிறைவேற்றக் கூடிய வகையில் மற்றும் எதிர்பார்த்த நலன்கள் பெற்றுக் கொள்ளக் கூடியவாறு செயற்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருக்காமை, நீர்த்தொட்டி முதல் நுகர்வோர் வரை நீரை எடுத்துச் செல்வதற்கு குழாய் முறைமை ஒன்று தயாரித்திருக்காமை, மின்சாரம் பெற்றுக் கொள்ளாமை ஆகிய விடயங்கள் காரணமாக செயற்திட்டங்கள் செயற்படுத்தப்படாமையால் செலவிடப்பட்ட தொகை விளைவற்றது என மாறியிருந்தது. | | |
| (ஆ) | குளியாப்பிட்டிய (மேற்கு) பிரதேச செயலகப் பிரிவை சேர்ந்த வடுகெதர கிராம உத்தியோகத்தர் பிரிவில் வடுகெதர நீர்ச் செயற்திட்டத்திற்காக 2014 ஆண்டில் மாகாண எழுச்சி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபா 1,990,000 இற்கான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், நிர்மாண அலுவல்கள் மேற்கொள்வதற்காக குறிப்பிட்ட ஒப்பந்த நிறுவனம் ஆகிய கூட்டுறவு சங்கத்திற்கு ரூபா 381,998 தொகை செலுத்தியிருந்ததுடன், தொழிநுட்ப உத்தியோகத்தரின் பரிந்துரையின்மையால் மேலும் ரூபா 1,589,208 இற்கான தொகையொன்று குறிப்பிட்ட நிறுவனத்திற்கு செலுத்த வேண்டியிருந்தது. நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டு சுமார் 8 வருடங்கள் கடந்திருந்த போதிலும் மின்சார இணைப்பு மற்றும் நீர்ப்பம்பு வழங்கியிருக்காத காரணத்தினால் நீர்த் தட்டுப்பாட்டினை சுமார் 150 வறிய குடும்ப மக்கள் கடினமான சிரமத்திற்கு முகங்கொடுத்திருந்ததுடன் செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்ட பணம் விளைவற்றுக் காணப்பட்டது. | 2014 ஆண்டில் செயற்படுத்த ஆரம்பிக்கப்பட்டிருந்த இந்த செயற்திட்டத்திற்காக ரூபா 381,997 இற்கான தொகை 2015 ஆண்டில் தொடர்வேலையாக மாற்றப்பட்டதுடன், அபிவிருத்தி வேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் செயற்திட்டத்தின் மீதியான அலுவல்கள் பிரதேச சபையின் பொதுநிதியில் இருந்து பயன்படுத்தி பூர்த்தி செய்வதற்கு பிரதேச சபையினால் இணக்கம் தெரிவித்துள்ளது என. | செயற்திட்டம் திட்டமிடப்பட்டவாறு வேலை பூர்த்தி செய்து குறிப்பிட்ட நலன்பெறுவோருக்கு பயன்படு விதமாக செயற்திட்டத்தின் நலன்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இப்பாகமுவ பிரதேச செயலகப் பிரிவில் மெதகெதர கிராம உத்தியோகத்தர் பிரிவில் இஹல வல்பொல கிராமத்தில் அமைந்துள்ள 0.8016 ஹெக்டெயர் அளவான காணி படைவீரர்கள் அல்லது அவர்களின் குடும்பத்தினர் இடையே பங்கீடு செய்வதற்காக 2000 ஆண்டின் போது நன்கொடையாளர் ஒருவரினால் நன்கொடையாக வழங்கப்பட்டிருந்தது. காணிக் கச்சேரி நடாத்துதல் மூலம் இந்தக் காணியின் வினியோக அலுவல்கள் மேற்கொள்ளாமல் விளைச்சல் குத்தகைக்காக வேறொரு தரப்பினருக்கு வழங்கியிருந்ததுடன், காணியை நன்கொடையாக வழங்கி 23 வருடங்கள் கடந்திருந்த போதிலும் குறிப்பிட்ட காணி உரிய கருமங்களுக்காக பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | காணிக் கச்சேரி நடாத்துவதற்கு மற்றும் மேலதிக அறிவுரைகள் பெற்றுக் கொள்வதற்காக மாகாண காணி ஆணையாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என. | நன்கொடையாளர்களின் குறிக்கோள் நிறைவேற்றக் கூடிய வகையில் செயற்படுத்தப்பட வேண்டும். |

### 3.4 பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் முன்னேற்றம் ஒன்றை பெற்றிருக்காத செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2014 ஆண்டின் போது பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ரூபா 9,627,428 இற்கான ஏற்பாடுகள் மீது செயற்படுத்தப்பட்டிருந்த வாரியபொல கலுகமுவ பாதையில் கொன்னவ பாலத்தில் இருந்து பம்புனுகொடுவ சந்தி வரை நீர்க் குழாய் நீடித்தல் செயற்திட்டம் ரூபா 4,746,457 இற்கான ஏற்பாடுகள் மீது செயற்படுத்தப்பட்ட பம்முனுகொடுவ சந்தியில் இருந்து நிம்மாகம வரை நீர்க் குழாய் நீடித்தல் செயற்திட்டத்திற்காக தேசிய நீர் வழங்கள் வடிகாலமைப்பு சபைக்கு 2014 ஆண்டில் பணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும், 10 வருடங்களுக்கு அண்மித்த காலம் முதல் இந்த இரண்டு செயற்திட்டங்கள் மூலமும் பொது | நீர் வழங்கள் சபையின் மூலம் தொடர்ச்சியாக முன்னேற்றத்தை வினவிய போது தற்போது காணப்படும் குறைபாடுகளை பூர்த்தி செய்வதற்காக நீர் குழாய்கள் கொள்வனவு செய்யும் ஒப்பந்த வேலை ஒன்று தயாரிக்கப்பட்டு வருகின்றது என அறிவிக்கப்பட்டிருந்தது.<br>பம்புனுகொடுவ சந்தியில் இருந்து நிம்மாகம வரை நீர் குழாய் நீடிப்பதற்காக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்காக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என. | சிறந்த ஆய்வொன்றின் பின்னர் செயற்திட்டம் முறைப்பிரகாரம் திட்டமிடப்பட வேண்டியதுடன் செயற்திட்டங்கள் நிறைவேற்றும் போது சிக்கனம் செயற்திறன், ஆக்கபூர்வ தன்மையுடன் எதிர்பார்த்த நலன்களை பெற்றுக் கொள்ளக் கூடியவாறு நிறைவேற்ற வேண்டும். |

மக்களுக்கு நீர் பெற்றுக்கொள்ள முடியாமையால் செலவிடப்பட்ட ரூபா 14,373,885 இற்கான தொகை விளைவற்றுக் காணப்பட்டது.

### 3.5. வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய இலக்கம் 02/2020 கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் பந்தி 102 இற்கு இணங்க வருடாந்த செயலாற்றுகை அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அறிக்கையின் 4 ஆவது பந்தியின் செயலாற்றுகை சுட்டி செயல் நடவடிக்கைத் திட்டத்தின் அடிப்படையில் 13 ஆக்கக் கூறுகளின் கீழ் காட்டப்பட்டிருந்த போதிலும் கிராமிய மின்சாரம், சூரியபெனல்/ மின்சாரம் (வீட்டு அலகுகளுக்காக) மற்றும் உத்தியோகபூர்வமற்ற ஆகிய செயற்திட்டங்களுக்காக ஏற்பாடுகள் ஏதும் ஒதுக்கப்பட்டு இருக்கவில்லை. | 2023 ஆண்டில் கிடைத்த ஏற்பாடுகள் வரையறுக்கப்பட்டிருந்தமை இதற்கு காரணமாக இருந்தது என அறிவிக்கப்பட்டுள்ளது என. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு அமைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் அடிப்படையில் செயலாற்றுகை சுட்டியின் படி நுழைபாதை நிர்மாணித்தல், சுகாதார வசதிகள் மற்றும் சிறு நீர்ப்பாசனம் ஆகிய மூன்று ஆக்கக்கூறுகளின் உண்மையான விளைவு மட்டம் 49 சதவீதத்தை விட குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | 2023 ஆண்டின் அனேக செயல்திட்டங்களுக்காக திட்டமிடப்பட்டவாறு ஏற்பாடுகள் கிடைக்கப் பெறாமை இதற்கு காரணமாக இருந்தது என. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு அமைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.6 உள்நாட்டு நிதியங்களின் மூலம் செயற்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சினால் 2017 ஆண்டின் போது பொல்கஹவெல பிரிவில் சிறு அளவிலான செயற்திட்டங்கள் செயற்படுத்துவதற்கு ஜுக்கி மெஷின், ஓவலொக் மெஷின், மோட்டர், மேசை துணி மின்னழுத்தி போன்ற 8 வகையான பண்டங்களில் 68 பண்ட அலகுகள் வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பௌதீக பரிசோதனையின் போது 06 நலன்பெறுவோரினால் பெற்றுக் கொண்டிருந்த ஜுக்கி தையல் இயந்திரங்கள் மற்றும் துணைக் கருவிகள் பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டதுடன் ஒரு நலன்பெறுவோருக்கு வழங்கியிருந்த ஜுக்கி தையல் இயந்திரம் மற்றும் அதற்கான துணைக் கருவிகள் அந்த வீட்டில் காணப்படவில்லை. | நலன்பெறுவோர்களுடன் கலந்துரையாடி, குறை பயன்பாட்டு நலன்பெறுவோர்களின் உபகரணங்களை திருப்பி எடுப்பதற்கு மற்றும் காணாமல் போயுள்ள ஜுக்கி இயந்திரத்திற்காக முறையான பதில் நலன்பெறுவோரிடம் கிடைத்திருக்காவிடின் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என. | செயற்திட்டத்தை செயற்படுத்தும் போது எதிர்பார்த்த நலன்களை பெற்றுக்கொள்வதற்கு இயலுமான முறையில் நிறைவேற்ற வேண்டும். |

### 3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கனேகொட தெற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் சுமார் 0.318 ஹெக்டயர் அளவான காணிப் பகுதியில் 2010 ஆண்டளவில் பொல்கஹவெல பிரதேச செயலகம் நிறுவப்பட்டிருந்ததுடன் இந்த காணிப் பகுதி உள்நாட்டு விவகார அமைச்சுக்கு உரித்தாக்கப்பட்டு பிரதேச செயலாளருக்கு அனுபவித்தலை ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | காணியை உரித்தாக்குவதற்குரிய அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என. | காணி சட்டரீதியாக உரித்தாக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மல்லவபிடிய சீ.டப்ளிவ்.டப்ளிவ். கன்னங்கர வித்தியாலயம் அமைந்துள்ள காணியில் 0.2645 ஹெக்டயர் காணிப் பகுதி ஒன்றில் தற்போது பிரதேச செயலகம் நடாத்தப்பட்டு வருவதுடன் மீளாய்வாண்டு இறுதியளவிலும் | இந்த காணி மாகாண பாடசாலை ஒன்றாக நடாத்தப்படுவதனால் இது தொடர்பான அவதானிப்பு அறிக்கையொன்று பெற்றுக் கொள்வதற்காக வடமேல் மாகாண கல்வி அமைச்சுச் செயலாளரிடம் வேண்டப்பட்டது என. | பிரதேச செயலகம் அமைந்துள்ள காணியை சட்டரீதியாக உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அந்தக் காணிப் பகுதியை பிரதேச செயலகத்திற்கு சட்டரீதியாக உரித்தாக்கியிருக்கவில்லை. | | |
| (இ) | எஹெடுவெவ பிரதேச செயலகப் பிரிவில் இலக்கம் 109 பொதானேகம கிராம உத்தியோகத்தர் பிரிவில் இறுதி கிராம காணி உறுதியில் 2146 மொலகம கிராமத்தில் மொலகம குளத்தை சார்ந்த் சுமார் 100 ஏக்கர் அளவொன்று 2023 ஆண்டு ஆகஸ்ட் மாதம் அளவில் அங்கீகாரமின்றி துப்பரவு செய்து சோள பயிர்ச்செய்கை ஒன்று மேற்கொண்டிருந்ததுடன் இந்த பிரதேசத்தின் எல்லைகளை அறுதியாக இனங்காண்பதற்காக குருநாகல் சிரேஷ்ட நிலஅளவை அத்தியட்சகரினால் 2023 மார்ச் 22 திகதிய அளவை செய்யப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக சுவடு வரைதல்கள் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அங்கீகாரம் பெற்றிருக்காதவருக்கு அகன்று செல்லும் படி அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அளவை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் குறிப்பிட்ட சுவடு வரைதல்கள் கிடைக்கப் பெறாததுடன் சுவடு வரைதல் கிடைக்கப்பட்ட பின்னர் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என. | அரசுக்கு சொந்தமான காணிகள் அங்கீகாரமின்றி நபர்களினால் பிடிக்கப்பட்டுள்ளமை தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | பொல்பிதிகம பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் முனைவுப் பத்திரக் காணிகளில் 66.9 ஐ விட மிகையான காணிப் பகுதி ஒன்று அரச அங்கீகாரமின்றி தொலைதொடர்பு கோபுரங்கள் 4 நிர்மாணிப்பதற்காக வழங்கியிருந்ததுடன் இந்த கோபுரத்தின் மூலம் குறிப்பிட்ட முனைவுப் பத்திரதாரர்கள் பாரிய வருமானம் ஒன்றினை உழைத்திருந்ததுடன் குறிப்பிட்ட காணிப் பகுதியை முறைப் பிரகாரம் அரசுக்கு உரித்தாக்கி அகற்ற நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | முனைவுப் பத்திரத்தை அரசுக்கு பெற்றுக்கொண்டு தொலைத்தொடர்பு கோபுரம் நிறுவப்பட்டிருந்த நாள் முதல் குத்தகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | அரசுக்கு சொந்தமான காணிப் பகுதிகள் முறைப் பிரகாரம் அரசுக்கு உரித்தாக்கி அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | குருநாகல் மாவட்டை சேர்ந்த 19 பிரதேச செயலக பிரிவுகளுக்கு உரிய சுமார் 80 ஏக்கர் காணி மற்றும் அதிலுள்ள 60 கட்டிடங்கள் விளைவற்று காணப்பட்டதுடன், பயன்தரக் கூடிய கருமம் ஒன்றிற்காக அவற்றை பயன்படுத்தி இருக்கவில்லை. | காணி விளைவற்றுக் காணப்படுவதற்கு பல்வேறு காரணங்கள் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதுடன் பயன்தரக்கூடிய கருமங்களுக்காக ஈடுபடுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என. | விளைவற்றுக் காணப்படும் ஆதனங்கள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | மஹவ பிரதேச செயலக பிரதேசத்தில் அமைந்துள்ள இலக்கம் 196 தலதாகம கிராம உத்தியோகத்தர் பிரிவில் தலதாகம கிராமத்தில் அ.க.பி.1979 இல் பத்திர இலக்கம் 09 பின்னிணைப்பு இலக்கம் 03 இல் துண்டு இலக்கம் 355 என்ற காணிப் பகுதியில் அமைந்துள்ள 0.622 ஹெக்டயர் இற்கான அரசாங்கக் காணி உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு உரித்தாக்கப்பட்டு அனுபவித்தலை பிரதேச செயலாளருக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | காணியை உரித்தாக்குவதற்காக தேவையான வேண்டுதல் கடிதம் அமைச்சுக்கு அனுப்பப்பட்டு தேவையான அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என. | அரசுக்கு சொந்தமான காணிப் பகுதிகள் முறைப் பிரகாரம் உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | உடுபெத்தாவ பிரதேச செயலகத்திற்கு சொந்தமான இலக்கம் 25-5707 கொண்ட கப் வண்டி 2011 மே 20 திகதி விபத்தொன்றுக்கு உள்ளாகி நி.பி. 104(4) விசாரணை அறிக்கையின் படி சேதத்தின் பெறுமதி ரூபா 114,650 தொகையாக இருந்தது. விபத்தின் பின்னர் வாகனத் திருத்த வேலைகளுக்காக முறையான நடவடிக்கை மேற்கொள்ளாமை மற்றும் பொருத்தமான விதத்தில் செயற்படாமை காரணமாக 2011 ஆண்டு முதல் இந்த வாகனம் விளைவற்றுக் காணப்பட்டது. 2023 ஆண்டில் நியமனம் செய்யப்பட்ட விஷேட கணிப்பீட்டுச் சபை அறிக்கையின் படி இந்த திருத்த வேலைக்காக மீளாய்வாண்டளவில் சுமார் ரூபா 1,500,000 மில்லியன் தொகை செலவிடுவதற்கு நேரிடும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | வாகனங்களின் திருத்த வேலை தொடர்பாக மேலும் இயந்திர பொறியியலாளர் மூலம் பரிசோதனை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என அறிவிக்கப்பட்டுள்ளது என. | விளைவற்றுக் காணப்படும் சொத்துக்கள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை விரைவாக எடுக்கப்பட வேண்டும். |
| (ஏ) | கிரிபாவ பிரதேச செயலகத்தினால் தேக்க வாகனம் என பயன்படுத்தப்படுகின்ற 2013 நவம்பர் 27 ஆந் திகதி முதல் ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டிருந்த இலக்கம் 52-6128 கொண்ட கப் வண்டி 2014 ஆண்டு மோட்டார் வாகனப் பரிசோதகரினால் பரிசோதனை மேற்கொண்டு வாகனத்தின் எரிபொருள் முறைமையை சேவை செய்து புதிய பட்டரி ஒன்று போடப்பட்டு வாகனத்தை பரிசோதனை மேற்கொள்ள வேண்டும் என | வாகனத்தின் திருத்த வேலைகள் தொடர்பாக தொடர்ந்தும் இயந்திரப் பொறியியலாளர் மூலம் பரிசோதனை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | விளைவற்றுக் காணப்படும் சொத்துக்கள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை விரைவாக எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அறிவிக்கப்பட்ட போதிலும் திருத்த வேலை மேற்கொள்வதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை சுமார் 10 வருட காலம் முதல் பிரதேச செயலக வளாகத்தில் நிறுத்தப்பட்டிருந்தது. 2014 ஆண்டின் போது குறைந்த பெறுமதிக்கு திருத்த வேலை மேற்கொள்ளக் கூடியதாக இருந்த போதிலும் இந்த வண்டி 2023 ஆண்டு திருத்த வேலைக்காக மொத்த மதிப்பீடு ரூபா 1,800,000 தொகை என மாவட்ட செயலகத்தினால் நியமனம் செய்யப்பட்டிருந்த அப்புறப்படுத்த வேண்டிய வாகனங்களை இனங்காண்பதற்கான விஷேட கணிப்பீட்டு சபையின் அறிக்கையின் படி அறிவிக்கப்பட்டிந்தது. | | |
| (ஐ) | சமூக சேவைத் திணைக்களத்தினால் நிகவரெட்டிய பிரதேச செயலகத்திற்கு வழங்கியிருந்த NWHA-8867 இலங்கங் கொண்ட டிரக்டர் பவுசர் வண்டி 2014 ஆகஸ்ட் 21 திகதி முதல் செயற்படாது காணப்பட்டு 10 வருடங்களுக்கு அண்மித்த காலம் கடந்திருந்த போதிலும் அப்புறப்படுத்துவதற்கு திருத்தவேலை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இது தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக சமூக சேவை திணைக்களத்தில் வினவிய போதிலும் பொருத்தமான அறிவுரைகள் கிடைக்கப் பெற்றிருக்கவில்லை என. | விளைவற்றுக் காணப்படும் சொத்துக்கள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை விரைவாக எடுக்கப்பட வேண்டும். |

**3.8 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரிதீகம பிரதேச செயலகப் பிரிவில் 2022 ஆண்டில் கிராமத்துடன் நேய கலந்துரையாடல் ரூபா 20 மில்லியனிற்கான நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபா 960,874 இற்கான செலவில் தெலம்புகல்ல பாடசாலை விளையாட்டு மைதானத்தில் எல்லையில் அமைந்துள்ள கால்வாயை சுத்தம் செய்து நிர்மாணிக்கப்பட்டிருந்த பாதுகாப்பு சுவர் முழுமையாக அகன்றிருந்ததுடன் இதன் காரணமாக செலவிடப்பட்டிருந்த பணம் விளைவற்ற செலவொன்றாக மாறியிந்தது. | பாடசாலை அபிவிருத்தி சங்கத்திற்கு இந்த சுவரை மீண்டும் புனரமைக்கும் படி அறிவுரை வழங்கப்பட்டுள்ளதுடன் தடுத்து வைத்தல் பணம் இது வரை செலுத்தப்பட்டிருக்கவில்லை என. | செயற்திட்டத்தை நிறைவேற்றும் போது எதிர்பார்த்த நலன்களை பெற்றுக் கொள்வதற்கு முடியுமான வகையில் நிறைவேற்றப்பட வேண்டும். |

### 3.9 முகாமைத்துவப் பலவீனங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | குளியாப்பிட்டி (கிழக்கு) பிரதேச செயலக பிரிவில் மெதெல்பொல பிரிவின் 2010 ஆம் ஆண்டின் போது சுமார் ரூபா 10 மில்லியன் செலவிடப்பட்டு குடிநீர் கிணறொன்று தனியார் காணி ஒன்றில் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் அந்தக் காணியை அரசாங்கத்திற்கு உரித்தாக்கியிருக்கவில்லை. பின்னர் ஒரு காலத்தில் காணி உரிமையாளரினால் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டிருந்தமையால் கிணறு அமைந்துள்ள காணி 2019 செம்தெம்பர் 19 திகதி பிஸ்கல் மூலமாக பெறப்பட்டு கிராம அபிவிருத்தி திணைக்கள பணிப்பாளருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இதன் மோட்டார் அறை உடைக்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு அல்லது கிணற்றை பராமரிப்பதற்கு மற்றும் உரித்தாக வைத்திருப்பதற்கு பொறுப்பான உத்தியோகத்தர்கள் நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை. | இந்த செயற்திட்டம் வடமேல் மாகாண கிராமிய அபிவிருத்தி அமைச்சின் மூலம் செயற்படுத்தப்பட்டு இருந்ததுடன் தற்போது சிக்கல் தன்மையொன்று காணப்படுகின்றது என. | அரசாங்க நிதியத்தை பயன்படுத்தி செயற்திட்டங்களை செயற்படுத்த முன்னர் காணியை உரிய முறையில் அரசுக்கு உரித்தாக்கிய பின்னர் நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | நிகவரெட்டிய, வாரியபொல, கனேவத்த, பண்டுவஸ்நுவர (மேற்கு), பொல்பித்திகம ஆகிய 5 பிரதேச செயலகங்களுக்குரிய தெதுருஓயா தெற்கு கால்வாய் செயற்திட்டத்திற்கான நட்டஈட்டுத் தொகையாகிய ரூபா 2,008,998,318 இற்கான தொகையொன்று செலுத்தி இருந்ததுடன், நட்டஈட்டுத் தொகைக்கு மேலதிகமாக கொடுப்பனவு தாமதமடைந்த காரணத்தினால் வட்டியாக ரூபா 46,190,594 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | காணிகளை தனதாக்கல் சட்டத்தின் படி ஒவ்வொரு கட்டத்துக்குமாக நீண்டகாலம் எடுக்கப்படுவதனால் இவ்வாறு வட்டி செலுத்துவதற்கு நேரிட்டிருந்தது. | காணியை தனதாக்குவதற்கான நட்டஈட்டுத் தொகை உரிய காலத்தில் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2023 ஆண்டின் இயற்கை அனர்த்தத்தின் மூலம் ஏற்பட்டிருந்த ஆதனங்களின் சேதத்திற்காக நட்டஈடாக தேசிய அனர்த்த உதவி நிலையத்திலிருந்து 30 பிரதேச செயலகங்களில் சேதனமடைந்திருந்த நபர்களுக்காக ரூபா 11,515,317 இற்கான நட்டஈட்டுத் தொகையொன்று கிடைக்கப்பட வேண்டிக் காணப்பட்டது. | ரூபா 3,814,692 இற்கான ஏற்பாடுகள் விண்ணப்பங்களை பரிசோதனை மேற்கொண்ட பின்னர் குறிப்பிட்ட பிரதேச செயலகங்களுக்கு அனுப்பப்படும் என. | சேதத்திற்குள்ளாகிய தரப்பினருக்கு நட்டஈடு வழங்குவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | இப்பாகமுவ பிரதேச செயலகப் பிரிவில் 2022 ஆண்டு கிராமத்துடன் நேய கலந்துரையாடல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபா 970,000 செலவிடப்பட்டு நேம்பிலிகும்புர விளையாட்டு மைதானம் வேலைகள் பாதியளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன், இந்த வேலைப் பகுதியை பூர்த்தி செய்வதற்கு ஒரு வருடத்திற்கு மிகையான காலம் கடந்திருந்த போதிலும் நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடத்தின் கூரை வேயப்பட்டிருக்காமையால் தயாரிக்கப்பட்டிருந்த கட்டிடம் அழிவடைந்து செல்லும் ஆபத்தொன்றிற்கு ஆளாகியிருந்தது. | சங்கத்தின் நிதியத்தின் மூலம் அல்லது ஏனைய முறையொன்றின் மூலம் கூரையை தயாரித்துக் கொள்ளும் படி கடிதம் ஒன்றின் மூலம் குறிப்பிட்ட சங்கத்திற்கு அறிவிக்கப்பட்டது என. | செயற்திட்டங்கள் நிறைவேற்றும் போது எதிர்பார்த்த நலன்களை பெற்றுக் கொள்ளக் கூடியவாறு செயற்பட வேண்டும். |
| (உ) | விவசாய அமைச்சின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற கிராமிய பொருளாதார பிரிவின் மூலம் பிரதேசங்களில் குறைந்த வருமானம் உடையோரின் வாழ்வாதாரத்தை முன்னேற்றி அவர்களின் வாழ்க்கை தரத்தை அதிகரிக்கும் குறிக்கோளுடன் வீடுசார் ஆடுவளர்க்கும் செயற்திட்டம் ஒன்று குருநாகல் மாவட்டத்தில் செயற்படுத்துவதற்காக ரூபா 6,965,000 இற்கான ஏற்பாட்டுத் தொகையில் ரூபா 4,987,000 செலவு மேற்கொள்ளப்பட்டு 21 பிரதேச செயலகப் பிரிவுகளில் செயற்படுத்தப்பட்டிருந்த போதிலும், அரசாங்கப் பண்ணைகளில் கொள்வனவு செய்வதற்காக ஆட்டுக் குட்டிகள் காணப்படாமை மற்றும் தனியார் வழங்குனர்கள் கடன் அடிப்படையில் ஆடுகளை வழங்குவதற்கு மறுத்தமையாலும் 9 பிரதேச செயலக பிரிவுகளில் இந்தச் செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இந்த செயற்திட்டத்திற்காக 09 பிரதேச செயலக பிரிவுகளுக்காக வழங்குனர்கள் ஆடுகளை கடன் அடிப்படையில் வழங்குவதற்கு முன் வராமையால் அரச மற்றும் தனியார் பண்ணைகளிலிருந்து கொள்வனவு செய்வதற்காக பிரதேச செயலகப் பிரிவுகளில் மேற்கொள்ளப்படவில்லை என. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | குருநாகல் மாவட்டத்தில் அமைந்துள்ள குளியாப்பிட்டிய (மேற்கு) கொபேகனே, பன்னல, மல்லவபிடிய மற்றும் ரிதிகம ஆகிய 05 பிரதேச செயலகங்களில் செயற்படுத்துவதற்காக எதிர்பார்க்கப்பட்ட 45 அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக காணி தனதாக்கல் அலுவல்கள் 02 வருடங்களுக்கும் 47 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் தாமதமாகிய போதிலும் காணிகளை தனதாக்கும் அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | அனுபவித்தலை ஏற்றுக் கொள்ளும் வர்த்தமானி கிடைத்திருந்த போதிலும் தனதாக்கிய பகுதியை இனங்காண முடியாமை காரணத்தினால் மீண்டும் நிலஅளவை விடயங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | அபிவிருத்தி செயற்திட்டங்கள் நிறைவேற்றுவதற்காக தேவையான காணிகள் சட்டரீதியாக உரித்தாக்கிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | குருநாகல் மாவட்டத்தில் 30 பிரதேச செயலகங்களில் மூலவள உருத்தோற்றத்தின் படி, 4,744 தற்காலிக வீடுகள், 6,596 அங்கீகாரமற்ற வதிவோர், 3,908 மின்சாரமற்ற வீடுகள், 17,372 பாதுகாப்பற்ற கிணறுகள் 33,513 பாதியளவு நிரந்தர வீடுகள், 3,818 கிடங்குக் கழிவறைகள் 7,654 கழிவறைகளின்றிய வீடுகள், 4,505 வதிவதற்கு வீடொன்று இல்லாத குடும்பங்கள் காணப்பட்ட போதிலும் மாவட்டத்தில் அபிவிருத்தி செயற்திட்டங்கள் செயற்படுத்தும் போது இந்த சிக்கல்களுக்கு தீர்வு பெறக் கூடியவாறு திட்டங்கள் தயாரித்து ஏற்பாடுகளை பயன்படுத்துதல் மீது கவனம் செலுத்தியிருக்கவில்லை. | குறிப்பிட்ட வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக நிர்மாணித்தல் நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | மாவட்டத்தினுள் காணப்பட்ட சிக்கல்களுக்கு தீர்வொன்றாக செயற்திட்டங்களை திட்டமிட்டு ஆக்கபூர்வமாக செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஏ) | குருநாகல் மாவட்டத்தில் 30 பிரதேச செயலகங்களில் 747 ஓய்வுபெற்றோருக்கு 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 157,490,678 இற்கான ஓய்வூதியம் மிகையாக செலுத்தப்பட்டிருந்ததுடன் 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அந்தத் தொகையில் ரூபா 97,564,450 இற்கான தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | மேலும் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்த ஓய்வூதியத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | மிகையாக செலுத்தப்பட்டிருந்த தொகையை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஓய்வுபெற்றோரிடம் அறவிடப்பட வேண்டிய தொகையை விட மிகையாக அறவிடப்பட்டவை என ரூபா 2,822,906 தொகை இனங்காணக் கூடியதாக இருந்ததுடன், அறவீடு செய்யப்பட வேண்டிய தொகையை விட குறைவாக அறவீடு செய்தல் ரூபா 3,461,572 தொகை காணப்பட்டது. | கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளவாறு அறவீடுகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | ஓய்வுபெற்றோரிடம் அறவிடப்பட வேண்டிய தொகை சரியாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஒ) | 12 பிரதேச செயலகங்களில் 14 ஓய்வுபெற்றவர்களுக்கு மிகையாக செலுத்தியிருந்த ஓய்வூதியம் மீண்டும் அறவீடு செய்வதற்கு முன்னர் அந்த ஓய்வு பெற்றவர்கள் இறந்திருந்தமையால் 2023 திசெம்பர் 31 திகதியளவில் அறவீடு செய்யப்படாமல் காணப்பட்ட மீதி ரூபா 2,251,301 தொகை காணப்பட்டது. இந்த மிகையாக செலுத்தியிருந்த ஓய்வூதியத்திற்கு பொறுப்பான தரப்பினர்களிடம் அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டு இறுதி அளவிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஓய்வூதியத் திணைக்களத்தின் அறிவுரைகளின் படி, விதவைகள் சம்பளம் செலுத்தும் போது நி.பி. 107 விசாரணையின் படி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | பணத்தை விதவைகள் சம்பளம் செலுத்தும் போது அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஓ) | குருநாகல் மாவட்ட செயலகம் மற்றும் 07 பிரதேச செயலகங்களுக்குரிய 09 இறந்த உத்தியோகத்தர்களிடம் 2023 திசெம்பர் 31 திகதியில் அளவில் அறவிடப்பட வேண்டிய ரூபா 1,127,445 இற்கான ஆதன, விஷேட, விழா, துவிச்சக்கர வண்டி மற்றும் இடர் கடன்மீதிகள் காணப்பட்ட போதிலும் கடன் மீதிகளின் அறவீடு செய்யப்படாத காலவீச்சு 01 வருடம் முதல் 20 வருடங்கள் வரையாக காணப்பட்டது. | ஓய்வூதியத்திலிருந்து கடனை அறவீடு செய்வதற்காக ஓய்வூதியத் திணைக்களத்தில் இருந்து அங்கீகாரம் கோரப்பட்டிருந்து என. | இறந்த உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஔ) | பம்முனுகொடுவ, மஹவ மற்றும் மாவத்தகம ஆகிய 03 பிரதேச செயலகங்களின் 08 கிராம சேவையாளர் பிரிவுகளில் அமைந்துள்ள அரச நிறுவனங்களுக்குரிய காணிகள் மற்றும் கட்டிடங்கள் அந்த நிறுவனங்களுக்கு உரித்தாக்கிக் கொள்வதற்காக விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டு 03 வருடங்கள் முதல் 13 வருடங்கள் வரை காலம் | உரிய ஆவணங்கள் மாகாண காணி ஆணையாளருக்கு பிரதிகளுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என. | அரச நிறுவனங்களுக்குரிய காணிகள் மற்றும் கட்டிடங்கள் அந்த நிறுவனங்களுக்கு முறைப்பிரகாரம் உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கடந்திருந்த போதிலும் அந்த காணிகளை உரித்தாக்கும் அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (க) | 2014/2015 பாதீட்டு திட்டத்தின் கீழ் வழங்கியிருந்த மோட்டார் சைக்கிள்களுக்காக 04 பிரதேச செயலகங்களின் ஓய்வுபெறல் இறத்தல் மற்றும் சேவையிலிருந்து வெளியேற்றல் ஆகிய காரணங்களால் 07 உத்தியோகத்தர்களிடம் ரூபா 676,600 இற்கான தொகையொன்று அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | நிலுவைத் தொகையை தவணைகளாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | வழங்கியிருந்த மோட்டார் சைக்கிள்களுக்காக உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ங) | வீரம்புகெதர பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் தம்மிட பாடசாலை, சந்தகல தெற்கு மற்றும் ரங்கனகமயில் அமைந்துள்ள கூட்டுறவுக் கட்டிடங்கள் பயன்படுத்தப்படாமையால் அழிவடைந்து காணப்பட்ட போதிலும் அது தொடர்பாக நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை. | அமைந்துள்ள காணிகளுக்காக உரிமையாளர்கள் முன்வந்துள்ளமையால் தம்மிட பாடசாலை அமைந்துள்ள காணியை உரித்தாக்குவதற்கு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன் ஏனைய காணிகளை நீண்ட கால குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது என. | விளைவற்றுக் காணப்படும் கட்டங்கள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கைகள் கூடிய விரைவாக எடுக்க வேண்டும். |
| (ஞ) | நாரம்மல பிரதேச செயலகப் பிரிவில் மரந்தகொல்ல கிராம உத்தியோகத்தர் பிரிவில் மரந்தகொல்ல பொது நிலம், சேவை இல்லம், இரவுபகல் விளையாட்டு மைதானம், சனசமூக நிலையம் மற்றும் இடர் முகாமைத்துவ மண்டபம் ஒன்றை கொண்டிருந்ததுடன் இந்தக் காணியின் முன்பக்க பகுதியில் அங்கீகாரமின்றிய பிடித்தலொன்று ஏற்பட்டிருந்ததுடன், சுமார் 2 ஏக்கர்களை கொண்ட இந்த பொது நிலத்தின் ஊடாக அண்மையில் வசிக்கும் வீடுகளுக்கு செல்வதற்காக சுமார் 7 அடி அகலத்தில் 300 அடி தூரத்திற்கு ABC பரப்பி வாகனங்கள் போக்குவரத்து செய்யக் கூடிய பாதை ஒன்று அங்கீகாரம் இன்றி நிர்மாணிக்கப்பட்டிருந்தது. | அங்கீகாரமின்றி உட்செல்லல் மேற்கொள்ளப்பட்டுள்ளதான என அறுதியாக கண்டறிவதற்காக மாகாண காணி ஆணையாளர் திணைக்களத்தின் கச்சேரி நில அளவையாளருக்கு அளவை செய்வதற்கான விண்ணப்பம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது. காணியில் காணப்படும் புத்தர் திருவறை நிர்மாணித்தல் மற்றும் சங்க மண்டபம் திருத்த வேலை மேற்கொள்வதற்காக கட்டிடப் பொருட்கள் போக்குவரத்து செய்தல் காரணத்தினால் கிடங்குகள் ஏற்பட்டிருந்த போது ABC பரப்பி பாதை செப்பனிடப்பட்டது என. | அரசாங்கத்துக்கு சொந்தமான காணிகள் அங்கீகாரமின்றிய நபர்களினால் பிடித்துக் கொள்ளல் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ச) குளியாப்பிட்டிய (கிழக்கு) பிரதேச செயலகப் பிரிவில் அரசுக்கு சொந்தமான தெஹிகம நுககஹமுலஹேன காணியில் அமைந்துள்ள 40x20 அடி அளவான கட்டிடம் மற்றும் அந்தக் காணியில் சுமார் 29 வருட காலம் அங்கீகாரமின்றி வதியும் பெண் ஒருவரினால் அனுபவிக்கப்படுவதுடன் இது வரை அது தொடர்பாக நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்தக் காணி 33 1/3 இற்கான வருடங்களுக்கான சிக்கலற்ற அரச உடைமை காணப்படுவதனால், காணியை அரசமயமாக்கி நிர்மாணிக்கும் போது ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கு தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என. | அரசாங்கத்துக்கு சொந்தமான காணிகள் அங்கீகாரமின்றிய நபர்களினால் பிடித்துக் கொள்ளல் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**4. நல்லாளுகை**

**4.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| உள்நாட்டு விவகார அமைச்சுச் செயலாளரின் 2018 ஆகஸ்ட 07 திகதிய இலக்கம் 06/2018 சுற்றறிக்கைக்கு இணங்க பிரதேச செயலக மட்டத்தில் காலாண்டிற்கு ஒருமுறை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டியிருந்த போதிலும், நிக்கவரெட்டிய, எஹடுவெவ மற்றும் வீரம்புகெதர ஆகிய 03 பிரதேச செயலகங்களினால் மீளாய்வாண்டின் போது 02 குழுக்கள் மாத்திரம் நடாத்தியிருந்தது. | 2023 ஆண்டிற்காக 02 குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டது. இரண்டாம் காலாண்டில் குழுக் கூட்டங்கள் நடாத்துவதற்கு தீர்மானித்திருந்த நாளில் ஏனைய கூட்டங்களில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது என. | சுற்றறிக்கையின் படி கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டும். |

**5. மனிதவள முகாமைத்துவம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியளவில் நிரந்தர நியமனம் பெற்றுக் கொண்டிருக்காத 324 பல்கரும அபிவிருத்தி உதவியாளர்கள் குருநாகல் மாவட்டத்தில் பிரதேச செயலகங்களுக்கு இணைக்கப்பட்டிருந்த போதிலும், அங்கீகரிக்கப்பட்ட பதவியொன்றில் குறித்தொதுக்கிய கடமையொன்றில் ஈடுபடுத்தியிருக்கவில்லை. | பல்கரும அபிவிருத்தி செயலாற்றுகை சேனை திணைக்களத்தினால் வழங்கப்பட்டிருந்த அறிவுரை மீது தயாரிக்கப்பட்ட வழிகாட்டல்கள் மாத்திரம் அவர்களை இணைக்கும் போது வழங்கியிருந்ததுடன், பிரதேச செயலக இந்த உதவியாளர்களுக்கு தற்காலிக கடமை சாட்டுதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என. | நிரந்தர நியமனம் கிடைத்திருக்காத பல்கரும அபிவிருத்தி உதவியாளர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |